(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C .No. **323/17**

**DEPOSITION OF PW 11 WITNESS FOR PROSECUTION / DEFENCE**

Name : டாக்டர் சரவணன்

Father's name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 13.3.18

மு வி **---**

நான் தற்போது மதுரை மருத்துவ கல்லுரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பயிற்று ஆசிரியராக பணி புரிகிறேன். **1.3.17** அன்று பிற்பகல் **2.30** மணியளவில் கூடல் புதுார் காவல்ஆய்வாளர் வேண்டுகோளை ஏற்று காவலர் முகமது ஜாபர்கான் அடையாளம் காட்டிய சுமார் **43** வயது மதிக்கத்தக்க மணி என்ற ஆண் பிரேதத்தை சடல கூராய்வு செய்தேன். அந்த சடலமானது உடல் முழுவதும் விறைப்புதன்மையுடனும் **,** நடுத்தர ஊட்டத்துடனும் **,** கைகால் நகங்கள் வெளிறியும் காணப்பட்டது. அதில் காணப்பட்ட இறப்புக்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமா**:-- 1)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **4 x 2** செமீ அறை ஆழத்துடன் இடது புர மார்பில் இடது அக்குள்ளுக்கு **6** செமீ கீழே நடுபுரத்தில் காணப்பட்டது. அதனை கூராய்வு செய்ததில் அந்த காயமானது சாய்ந்தும்**,** கீழ் நோக்கியும்**,** முன்புரமாக அதன் அடியில்

காணப்பட்ட சதைகள் ரத்த குழாய்கள் நரம்புகள் ஆகியவற்றை **6** வது இடது விலா இடையில் **3** செமீ **x 1** செமீ உள்ளும் புறமும் நுழைந்தும்

அதன் அடியில் காணப்பட்ட இதய சவ்வு பகுதியில் **2** செமீ **x 1** செமீ உள்ளும் புறமும் நுழைந்தும் இதயத்தின் வலது கீழ் அறையில் நுழைந்தும் காணப்பட்டது. **2)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **3** செமீ **x 1** செமீ**x** அறை அழத்துடன் வலது காரை எலும்பிலிருந்து **6** செமீக்கு கீழே காணப்பட்டது. அதனை கூராய்வு செய்ததில் அந்த காயமானது கீழ் நோக்கியும் பின் நோக்கியும் அதன் அடியில் காணப்பட்ட தசைகள் **,** ரத்த குழாய்கள்**,** நரம்புகள் அவற்றை**3** வது விலா இடையில் **2** செமீ **x 1** செமீ உள்ளும் புரமும் துளைத்தும் அதன் அடியில் காணப்பட்ட வலது நுரையீரலின் மேல் புரத்தில் **1** செமீ **x 1** செமீ **x 1** செமீ அளவில் துளைத்திருந்தது. வலது மார்பு கூடு அறையில் **150** மிலி திரவ ரத்தம் ரத்த உறைதலுடன் காணப்பட்டது. **3)** ஒரு சாய்வான குத்து காயமானது **3** செமீ **x 1** செமீ **x** அறை ஆழத்துடன் காயம் எண் **1** லிருந்து **8** செமீக்கு கீழே வலது மார்பு காம்பிலிருந்து **6** செமீ துளைத்து காணப்பட்டது. அதனை கூராய்வு செய்ததில் அந்த காயமானது கீழ் நோக்கியும் பின் நோக்கியும் அதனடியில் காணப்பட்ட தசைகள்**,** ரத்தகுழாய்கள்**,** நரம்புகளை **6** வது விலா இடையில் **2** செமீ **x1** செமீ**x** உள்ளும் புறமும் துளைத்தும் அதன் அடியில் வலது நுரையீரலின் கீழ் பகுதியில் **1** செமீ **x1** செமீ **x 1** செமீ அளவில் நுழைந்திருந்தது. **4)** சாய்ந்த குத்து காயமானது **3** செமீ **x1** செமீ **x** அறை ஆழத்துடன் வலது மார்பின் முன் பகுதியில் நடு நெஞ்சின் **(Xiphisternum)** எலும்பின் **3** செமீக்கு மேலே காணப்பட்டது. அதனை கூராய்வு செய்ததில் அந்த காயமானது சாய்ந்தும் முன் நோக்கியும் கீழ் நோக்கியும் அதன் அடியில் சதைகள் ரத்த குழாய்கள் நரம்புகளை துளைத்தும் **2** செமீ **x1** செமீ **x** உள்ளும் புறமும் துளைத்தும் அதன் அடியில் காணப்பட்ட கல்லீரலின் இடது புரத்தில் **1** செமீ **x 1** செமீ **x1** செமீ அளவில் நுழைந்திருந்தது. **5)** **8** சாய்ந்த குத்து காயங்கள் **3 x 1 x** அறை ஆழத்துடன் இடது மார்பு பகுதியில் **20** செமீ **x12** செமீ அளவில் பகுதிகளில் **9** செமீ இடது அக்குள்ளின் கீழே காணப்பட்டது. அவற்றை கூராய்வு செய்ததில் காயங்கள் கீழ் நோக்கியும் பின் நோக்கியும் அதன் அடியில் காணப்பட்ட இடது நுரையீரல் சவ்வு**,** இடது நுரையீரலின் மேல் பகுதியில்

நுழைந்திருந்தது. இடது மார்பு கூடு அறையில் **150** மிலி அளவில் ரத்த திரவம் ரத்த உறைவுடன் காணப்பட்டது. **6)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **3** செமீ **1** செமீ அறை ஆழத்துடன் இடது முன்புர வயிற்று பகுதியில் தொப்புளிலிருந்து **15** செமீ இடபுரமாக காணப்பட்டது. அதனை கூராய்வு செய்ததில் அந்த காயமானது சாய்ந்தும் கீழ்நோக்கியும் பின் நோக்கியும் அதன் அடியில் காணப்பட்ட சதைகள் ரத்தகுழாய்களை துளைத்தும் வயிற்று கூடு அறை வரை இருந்தது. வயிற்று கூடு அறையில் **500** மிலி திரவ ரத்தம் ரத்த உறைதலுடன் காணப்பட்டது. **7) 3** சாய்ந்த குத்து காயங்கள் **3** செமீ **x 1** செமீ **x** எலும்பு ஆழத்துடன் வலது கையில் உட் பகுதியில் **2** செமீ **x 2.5** செமீ இடைவெளியில் காணப்பட்டது. **8)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **3** செமீ **x1** செமீ **x** சதை ஆழத்துடன் வலது முன்னங்கையில் காணப்பட்டது. **9)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **3** செமீ**x 1** செமீ சதை ஆழத்துடன் காயம் எண் **8** லிருந்து **3** செமீ க்கு கீழே காணப்பட்டது. **10)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **3** செமீ **x 1** செமீ சதை ஆழத்துடன் வலது முன்னங்கையில் பின் பகுதியில் காணப்பட்டது. **11)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **3** செமீ**x 1** செமீ சதை ஆழத்துடன் வலது மார்பு பகுதியில் வலது அக்குள்ளிலிருந்து **15** செமீக்கு கீழே காணப்பட்டது. **12)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **2** செமீ **x 1** செமீ**x** சதை ஆழத்துடன் வலது முழங்கையில் காணப்பட்டது. **13)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **3** செமீ **x1** செமீ **x** சதை ஆழத்துடன் இடது தோள்பட்டையில் மேல் பகுதியில் காணப்பட்டது. **14)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **4** செமீ **x 1** செமீ சதை ஆழத்துடன் இடது முழங்கையில் உட் பகுதியில் காணப்பட்டது. **15)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **4** செமீ **1** செமீ சதை ஆழத்துடன் இடது முழங்கையிலிருந்து **6** செமீக்கு கீழே காணப்பட்டது. **16)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **3** செமீ **x 1** செமீ சதை ஆழத்துடன் இடது புர கழுத்தின் மேல்பகுதியில் **2** செமீ இடது பின்னங்காது எலும்பிலிருந்து கீழே காணப்பட்டது. **17)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **3** செமீ **1** செமீ சதை ஆழத்துடன் இடது புர கழுத்தின் மேல் பகுதியில் காயம் எண் **16** லிருந்து **2** செமீக்கு கீழே காணப்பட்டது. **18)** ஒரு சாய்ந்த குத்து காயமானது **3** செமீ **x 1** செமீ சதை ஆழத்துடன் இடது புர கழுத்து பகுதியில் காணப்பட்டது.

கு றிப்பு **:---** அனைத்து குத்து காயங்களின் ஓரங்கள் சீராகவும் காயத்தின் இருமுனை கூராகவும் காணப்பட்டன.

இதர விவரங்கள் **:---** இதய சவ்வு பகுதியில் **15** மிலி அளவில் வைக்கோல் நிற திரவம் காணப்பட்டது. இதயத்தின் **2** அறைகள் காலியாக காணப்பட்டன. இதய தமனிகள் சீராகயிருந்தன. நுரையீரலின் வெட்டு தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது. தொண்டை, மூச்சுகுழாய் நாவடி எலும்பு சீராகயிருந்தன. இரைப்பையில் **300** கி அளவிலான பகுதி செரித்த உணவு எவ்வித குறிப்பிடும்படியான வாசம் இன்றியும் அதன் சிலேட்டுமபடலம் வெளிறியும் இருந்தது. கல்லீரல் , மண்ணீரல், சிறுநீரகங்கள் வெட்டு தோற்றத்தில் வெளிறி காணப்பட்டன. சிறுகுடலில் **20** மிலி மர நிற திரவம் எவ்வித குறிப்பிட்ட நெடியின்றியும் அதன் சிலேட்டுமபடலம் வெளிறியும் காணப்பட்டன. சிறுநீர்ப்பை காலியாக காணப்பட்டது.

உள்ளுறுப்புகள் ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு பரிசோதனையின் முடிவில் எவ்வித நச்சுதன்மையும் கண்டறியப்படவில்லை. எனக்கு கிடைக்கப் பெற்ற விஸ்ரா அறிக்கை அசாஆ **16.** அதன் அடிப்படையில் கருத்துரையானது மேற்படி நபர் தனக்கு ஏற்பட்ட காயம் எண் **1** லிருந்து **6** வரையிலான காயத்தாலும் அதனால் ஏற்பட்ட உட் காயத்தாலும் ஏனைய பிற காயங்களின் கூட்டு விளைவாலும் உண்டான அதிர்ச்சி மற்றும் ரத்த போக்கினால் பிரேத பரிசோதனைக்கு **20** லிருந்து **26** மணி நேரத்திற்குள் இறந்திருக்கலாம் என சான்று அளிக்கப்பட்டது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ **17.**

இறந்தவருக்கு ஏற்பட்ட காயங்கள் கத்திகள் சா பொ **1** மற்றும் **11** ஆல் ஏற்பட வாய்ப்புண்டு . என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**கு வி ---**

**ஒத்தி வைக்கப்படுகிறது.**